Judicial Form No. 53
(see Rule 42)
Deposition of the Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, UTHAMAPALAYAM.
CC No.347/2022 Date:02.02.2026
Deposition of witness for prosecution: PW1 ( LW1)
Defence:
Court:

| | | | |
|---|---|---|---|
| Name | ஆனந்தன் | Village | கம்பம் |
| Father/ Husband Name | அம்ஸ்காளை | Taluk | உத்தமபாளையம் |
| Age | 41/2026 | Calling | லோடுமேன் |

Solemnly affirmed in accordance with the provision of the Oaths Act 1969 (central Act 44 of 1969) on 02.02.2026 TIME 12.50 **PM**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை :–**

எதிரிகளை தெரியும், எனது ஊரைச்சேர்ந்தவர்கள். கடந்த 02.08.2020ம் தேதி மாலை 04.00 மணியளவில் நான் எனது வீட்டில் இருந்தபோது, எனது அண்ணன் மகன் என்னிடம் வந்து எனது அண்ணன் இளையராஜாவிற்கும், எதிரிகளுக்கும் சண்டை நடப்பதாக என்னிடம் கூறினார். உடனே நான் சண்டை நடந்த இளையராஜா வீட்டிற்கு சென்று சண்டையை விலக்க முயன்றபோது, சின்ன ஈஸ்வரன் வேல் கம்பை வைத்து எனது வலது தாடை பகுதியில் குத்திவிட்டார். பெரிய ஈஸ்வரன் கம்பை வைத்து எனது பின் தலையில் அடித்தார். அதில் எனக்கு காயம் ஏற்பட்டது. அருகில் இருந்த கருப்பன், முருகன் ஆகியோர் என்னை உத்தமபாளையம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு கொண்டு சேர்த்தார்கள். அங்கே சிகிச்சையில் இருந்தபோது போலிசார் வந்து விசாரித்து வாக்குமூலம் வாங்கினார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலம் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். புகார் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தான் மருத்துவமனையில் 2 நாளாக உள்நோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டேன். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

(எதிரிகள் ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யப்படாததால், குறுக்கு விசாரணை முடித்து வைக்கப்படுகிறது.)

சாட்சி இன்று இந்நீதிமன்றத்தில் ஆஜராகி என் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் வாய்மொழியாக சாட்சியம் அளித்ததை இந்நீதிமன்றம் தட்டச்சர் மூலமாக பதிவு செய்து சாட்சி படித்து பார்த்து/விளக்கி கூறி சரியென ஒப்புக்கொண்டுகையொப்பம் செய்துள்ளார்.

Sd/P. Kamarasu
நீதித்துறை நடுவர்,
உத்தமபாளையம்.